முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1583

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.01.2024, திங்கட்கிழமை

1. பார்காக்க வந்த மாதவசியே
   பரபிரம்ம மகா சூட்சுமம் அறிந்த மகா ஞானியே
   சீர்திருத்தம் செய்து இந்த கலியுகத்தில்
   சித்திமிகு ஞானயுகம் உருவாக்க
2. உருவாக்க மாதவ சக்திகள் தன்னை
   உலகமெங்கும் அறம் தர்மமாக்கி
   ஆதரவாய் என் அவதாரம் புரிந்த அரங்கனே
   ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
3. யானுமே ஞான அறிவுரை ஆசி
   உரைத்திடுவேன் சோபகிருது கலைத் திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் தை மாதம் 15 ம் நாள், 29.01.2024, திங்கட்கிழமை)
   ஞானப்படைகள் உன்வழி உலகமெல்லாம் நிரம்பி
   ஞானிகளுடைய வெளிப்பாடு அதிகமாகி
4. ஆகியே ஞான சித்தர் காலம் கனியும்
   ஞானிகள் படைப்பெருகப் பெருக இனிதே
   அகிலம் முழுக்க ஞானிகள் ஆட்சி உருவாகி
   ஆற்றல்மிக்க ஞானத் தலைமைகள் அரங்கன் உன் வேண்டல்படி நிறைவேறி
5. நிறைவேறி உலக மாற்றம்
   நீதி நேர்மை ஞானபலம் கொண்ட
   அறம் போற்றும் ஞான ஆட்சியாக
   அறிவிப்பேன் கலியுகம் சடுதி காணும்
6. காணவே அரங்கன் உன்னோடு ஆறுமுகன் யான்
   கண்டுரைப்பேன் ஆற்றல்பட இருந்து இயக்கிவர
   ஞானதேசிகன் உன் அவதார மகிமை
   ஞாலமதில் அறிந்து உன்பால் வந்தவர்களெல்லாம்

7. எல்லோரும் ஞானிகளாகும் வாய்ப்பு

இனிதே ஆறுமுகன் யான் ஆற்றலாக வரமாகத் தந்தருள்வேன்
மாற்றம் கருதி உன் வழி உலக மக்கள் வர
மண்ணுலகம் ஆற்றல்பட தேற்றம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–